செ.வெ.எண்:509 நாள்:29.06.2025

செய்தி வெளியீடு

திருவள்ளூர் மாவட்டம், குத்தம்பாக்கத்தில் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் புதிய புறநகர் பேருந்து முனையத்தின் பணிகளை துரிதப்படுத்தும் வகையில் மாண்புமிகு அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு அவர்கள் நேரில் ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினார்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்* நல்வழிகாட்டுதலின்படி இன்று (29.6.2025) திருவள்ளூர் மாவட்டம், குத்தம்பாக்கத்தில் கட்டப்பட்டு வரும் புதிய புறநகர் பேருந்து முனையத்தின் பணிகளை மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான *திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்* நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினார்.

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் ஆய்வுக்குப்பின் செய்தியாளர்களிடம் கூறியதாவது: சென்னையின் போக்குவரத்து நெரிசலை கருத்தில் கொண்டு திருவள்ளூர் மாவட்டம், குத்தம்பாக்கத்தில் புதிய புறநகர் பேருந்து நிலையம் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வருகிறது. இந்தப் பேருந்து நிலையத்துக்கான பணிகள் முடிவடைந்து விட்டன. இப்போது பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட வேண்டியுள்ளது. *மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்* உத்தரவிட்டதன் பேரில் இந்தப் பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன.

அதற்கிணங்க, இன்று எங்கள் துறையின் செயலாளர் அன்பிற்கினிய திருமதி.காகர்லா உஷா அவர்களும், உறுப்பினர் செயலாளர் திரு.பிரகாஷ் அவர்களும், இந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் திரு.கிருஷ்ணசாமி அவர்களும், போக்குவரத்து துறை மற்றும் மாவட்ட ஆட்சியருடன் இணைந்து, எங்கள் துறையின் சிஇஓ திரு.சிவஞானம் அவர்களும் ஒருங்கிணைந்து ஆய்வு மேற்கொண்டோம்.

பயணிகள் எளிதாக வந்து செல்லும் வகையில்: பயணிகள் நிறுத்தும் இடங்கள், வாகனங்கள் நிறுத்தும் இடங்கள், கழிப்பறைகள், குடிநீர் வசதி, ஓட்டுனர் மற்றும் நடத்துநர்களுக்கான ஓய்வறைகள், உணவகங்கள், மருத்துவ வசதிக்கான கட்டமைப்பு, பாதுகாப்புக்கான காவல் அமைப்பு என அனைத்தும் இன்றே நேரில் கள ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இந்த பணிகள் விரைவாக முடிக்கப்படும். பருவமழையை கருத்தில் கொண்டு, இந்த ஆண்டின் இறுதிக்குள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது. பருவமழை பெரியளவில் இல்லையெனில் 2025 நவம்பர் மாதத்திற்குள் தொடங்கப்படும்.

வாரத்திற்கு ஒருமுறையாவது, நானோ அல்லது துறையின் செயலாளரோ அல்லது உறுப்பினர் செயலாளரோ, இந்த பணிகளை நேரில் பார்வையிட்டு முன்னேற்றத்தை கண்காணிக்க திட்டமிட்டுள்ளோம்.

கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் குறித்து செய்தியாளர்களின் கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த பதில் :

கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்திற்கு நான் மிகவும் நன்றியுடன் நினைவுகூரும், ஏனெனில் அது மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய தீர்மானத்தின் விளைவே.

கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் தொடங்கப்பட்டபோது சில சிக்கல்கள் இருந்தன. ஆனால் தற்போது அவை அனைத்தும் முறையாக தீர்க்கப்பட்டுள்ளன. ஆரம்ப கட்டத்தில் எந்தக் கட்டுமானத்திலும் சிறிய சிக்கல்கள் இருக்கும்; ஆனால் திட்டமிடல் இல்லாமல் கிளாம்பாக்கத்தில் ஆரம்பித்த நிலையம் இப்போது திட்டமிட்டு பயணிகள் வசதிக்கேற்ப மேம்படுத்தப்பட்டுள்ளது.

இரவு 11, 12 மணி நேரத்திற்குப் பிறகு போக்குவரத்து வசதி குறைவாக இருப்பதாக புகார்களுடன் 50–100 பேர் வந்தால் கூட, அதற்கேற்ப உடனடி ஏற்பாடுகள் செய்து பேருந்துகளை இயக்கி வருகின்றோம். பகலில் எந்தவித சிக்கலும் இல்லாது இயங்கி வருகிறது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் உடனடி நடவடிக்கைகள் எடுத்து வருகின்றார். புதிதாக எழும் பிரச்சனைகளும் தீர்க்கப்பட்டு வருகின்றன. கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் ஒரு மிகப்பெரிய வரப்பிரசாதம்.

உதாரணமாக, திருச்சி விமான நிலையம் தொடங்கி பல வருடங்கள் ஆகியும் விமான சேவை முறையாக இல்லை.

ஆனால் கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் கடந்த 2023 டிசம்பர் 31 அன்று திறக்கப்பட்ட நாளிலிருந்தே மிகச் சிறப்பாக இயங்கி வருகிறது.

அந்த பேருந்து நிலையத்தில்:கலைஞர் நூற்றாண்டு காலநிலை பூங்கா, நீரூற்றுப் பூங்கா, மருத்துவமனை, சிறு மழையிலும் தண்ணீர் தேங்காமல் வடிகால்கள் என அனைத்தும் அமைக்கப்பட்டுள்ளன.

கிளாம்பாக்கத்தில் ரயில் நிலையம் அமைக்கப்படாத நிலையில், தற்போது அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. 2025 ஆகஸ்ட் அல்லது செப்டம்பர் மாதத்திற்குள் ரயில் நிலையமும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வரும்.

கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் காவல் நிலையம் இல்லாத காரணமாக தற்போது அதற்கும் கட்டமைப்புப் பணிகள் முடிவடைவதில் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளோம். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விரைவில் திறந்து வைக்க உள்ளார்.

Verified @ RealEstate™

மாதவரம் பேருந்து நிலையம் இன்னும் முழுமை அடையவில்லை. அந்த பகுதியில் மெட்ரோ ரயில் பணி நடைபெற்று வருகிறது. அது முடிந்த பிறகு தென் மாவட்டங்களுக்கு பெரிதும் பயணிகள் சேவையை வழங்கும் வகையில் அதிக பேருந்துகள் இயக்கப்படும். கடந்த 45 நாட்களாக சில பேருந்துகள் இயக்கப்படத் தொடங்கியுள்ளன.

மெட்ரோ பணியும் விரைவில் முடிவடையும். கிளாம்பாக்கம், மாதவரம், கூத்தம்பாக்கம், செங்கல்பட்டு, மகாபலிபுரம் ஆகிய பேருந்து நிலையங்கள் அனைத்தும் செயல்பாட்டுக்கு வந்த பிறகு, சென்னை மாநகரப்பகுதி போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் ஒரு தீர்வாக அமையும்.

இதனை மாண்புமிகு முதல்வர் அவர்கள் நேரில் கண்காணித்து, திட்டமிட்டவாறே துறை அதிகாரிகளுடன் பணிகளை விரைவாக முடிக்க உத்தரவிட்டுள்ளார். அதற்கேற்ப, இன்றைய விடுமுறை நாளிலும் நாம் அனைவரும் களத்தில் பணியாற்றி வருகின்றோம். என மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறினார்.

இவ்ஆய்வின்போது வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா,இ.ஆ.ப., சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் திரு.கோ.பிரகாஷ்,இ.ஆ.ப., முதன்மை செயல் அலுவலர் திரு.அ.சிவஞானம்,இ.ஆ.ப., திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மு.பிரதாப்,இ.ஆ.ப., பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆ.கிருஷ்ணசாமி, தலைமை பொறியாளர் திரு.மகாவிஷ்ணு, குத்தம்பாக்கம் பேருந்து முனைய தலைமை நிர்வாக அலுவலர் டாக்டர் பிரின்ஸிலி ராஜ்குமார், கண்காணிப்பு பொறியாளர் திரு.ராஜமகேஷ்குமார் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.

Verified @ RealEstate™